Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# சித்தன்னவாசல் குகை ஓவியங்களில் நடனமங்கையர்களின் அழகியல் பற்றிய சுருக்கக் கள ஆய்வு

27

லெ.பாரதிராஜா[1] & டாக்டர். கே.ராஜேந்திரன்[2]

[1]முனைவர் பட்ட ஆய்வாளர்,தமிழ் நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகம், சென்னை -. 600 028.மின்னஞ்சல்: lenabharathi@gmail.com

[2]விரிவுரையாளர், அரசு கட்டட மற்றும் சிற்பக் கல்லூரி,மாமல்லபுரம்

**ஆய்வுச் சுருக்கம்:**

தமிழ் நாட்டின் புதுக்கோட்டை மாவட்டம், சித்தன்னவாசல் ஓவியங்கள் பற்றிய வரலாறு, கலைத்திறன் ஓவியங்களில் காணும் செய்திகள் ஆய்வாளர்களின் கூற்றுப்படி நமக்கு பல உள்ளன. இவ்வோவியங்களில், நடனமங்கையர் இருவரின் ஓவியங்கள் இக்குடைவரைக் கோயிலுக்குள் நுழைவோர் மண்டக வாயிலில் தூண்களில் இரு பக்கங்களிலும் உள்ள இரு நாட்டியக் கலையரசிகளின் காட்சிகள், குடைவரை நாட்டியக் கூடமா! அல்லது ஓவியக்கூடமா! என்று வியக்கும் வண்ணம் உள்ளது.

இக்காட்சியானது இக்கோயிலுக்கு வருபவர்களை நடனம் ஆடி வரவேற்பது போல் உள்ளது.கி.பி 9-ஆம் நூற்றாண்டில் கோயிலில் திருவிழாக்கள் நடைபெறும் போது நடனக்கலை நிகழ்ச்சிகள் நடைபற்று இருப்பதை அறிவுறுத்துகிறது. இவ்வோவியங்களில் காணப்படும் யுத்திகள், பாணிகள், நலினம், ஆபரணங்கள் மற்றும் வண்ணங்கள் இவையனைத்தும் உணர்த்தும் அழகியல் சார்ந்த விடயங்களின் சுருக்க கள ஆய்வாகும்.

## முன்னுரை:

தொல்லியல் துறை ஆய்வாளர்கள் மற்றும் பல ஆய்வியல் அறிஞர்கள் ஆய்வின் மூலம் இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள “அஜந்தா” குகை ஓவியங்களிலும் மற்றும் இலங்கையின் மாத்தளை மாவட்டத்தில் உள்ள “சிகிரியா” ஓவியங்களிலும் காணப்படும் அழகியல் போன்று சித்தன்னவாசல் குகை ஓவியங்கள் நம் முன்னோர்களின் அழகியல் சார்ந்த கட்டமைப்பையும், கலைத்திறன் மிக்க கலாச்சார மாண்பையும் விளக்கும் விதமாக உள்ளது.

## அழகியல்:

இயற்கையிலும் கலையிலும் உள்ள அழகை அதன் இயக்கம், நெறிகள் நுட்பங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஆராய்வதும் வகுத்துக் கொள்வனும் அழகியல் எனப்படுகிறது. அழகியல் கோட்பாடு மெய்யியலின் ஒரு பகுதியாகவே கருதப்பட்டு வருகிறது. கி.பி **18-**ஆம்

ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)

நூற்றாண்டில் அதன் போக்கு மாற்றம் பெறத்தொடங்கியது. நவீன் கால தத்துவச் சிந்தனையாளரான இடாய்ச்சுலாந்து (ஜெர்மனி) நாட்டைச் சார்ந்த இம்மானுவேல் காண்ட் என்பவரால் புதிய பரிமாணத்தைப் பெற்றது.

**தமிழரின் அழகியல்:**

தமிழரில் அழகியல் என்னும் சொல்லை இலக்கிய விமர்சகர் திருநெல்வேலி ஆ.முத்துசீலன் (15 .11.1910-13.08.1954) என்பவர் உருவாக்கி தன் கட்டுரைகளில் பயன்படுத்தினார். தமிழ்ச் சிந்தனையில் கலை,இலக்கியம். இசை மற்றும் நிகழ்த்துக்கலைகள் ஆகியவற்றுக்கான அழகியல் சார்ந்த அளவுகோள்களும் இலக்கணங்களும் நீண்ட காலமாக இருந்துள்ளன.

இந்திய மரபில் அழகியல் இன்பத்தை “ரசம்” எனும் பதத்தினால் குறித்தனர். இருக்கு வேதத்தில் சோமாவன எனும் தாவரத்திலிருந்து பெறப்பட்ட பாணத்தைக் குறிக்க ரசம் பயன்பட்டது (சோமரசம்).

**அழகியலும் உணர்வுகளும்**

மத்தாப்புப் பொறிகள்
இன்ன மும் ஆறாத
சுடு மணலின்
ஓர் அருவி - அது
கருத்தைத் தெளிக்கும் புனல்.

சமூக பதார்த்தங்களிலிருந்து உணர்வுகள் தெறித்து வருகின்றன. கலை இலக்கியங்கள் தொடர்பான

அறிக்கையானது கலைஞர்களது கோட்பாடுகள் தொடர்பான அமைப்புகளிலே மாற்றங்கள் வருவித்தல் வேண்டும். அழகியல் என்பது உணர்வுகளைச் செப்பனிடுதலாக அமைதல் வேண்டும். உணர்வுகளைச் செப்பனிடுதற்குக் கருத்துநிலை துணை செய்கின்றது.

**மார்க்கீசிய அழகியல்:**

அழகியல் மதிப்பீடு, சமூக வரலாற்று அனுபவமே. கற்பனை, அழகியல் உணர்வு செயலூக்கம் உடையது. ஒரு மனிதன் வாழ்க்கையோடும் யதார்த்தத்தோடும் முற்போக்குச் சக்திகளோடும் எந்த அளவுக்கு ஈடுபாடு கொள்கிறானோ அவ்வளவுக்கு அவனுக்கு அழகியல் உணர்வு மிகுதியாக இருக்கும்.

**ஆடல் மகளிரின் அற்புதத் தோற்றங்கள்!.**

சித்தன்னவாசல் குகைக் கோயில், ஓவியம், சிற்பம், நடனம் என முக்கலைகளையும் சிறப்பிக்கும் கலைக்கூடமாக விளங்குகிறது.

குடை வரைக் கோயிலுக்குள் நுழைவோர் மண்டக வாயிலின் தூண்களில் இரு பக்கங்களிலும் உள்ள இரு நாட்டியக்கலையரசிகளின் காட்சிகள், இக்கோயிலுக்கு வருபவர்களை நடனம் ஆடி வரவேற்பது போல் உள்ளது.

கி.பி 9-ஆம் நூற்றாண்டில் கோயில்களில் திருவிழாக்கள் நடை பெறும் போது நடனக் கலை நிகழ்ச்சிகள் நடை பெற்றிருக்கக்கூடும் என்றும், அதை கருத்தில் கொண்டு இந்த ஓவியங்களை

வரைந்து இருக்கலாம் என்றும் புலவர் புசி. தமிழரசன், தனது சித்தன்னவாசல் ஆராய்ச்சி நூலில் பக்கம் - 68-இல் குறிப்பிடுகின்றார்.

**வலப்புறத் தூணின் நாட்டிய மங்கை.**

இவளுடைய இடுப்பிலிருந்து முடிவரை உள்ள வடிவம் மட்டும் அழியாமல் எஞ்சி நிற்கிறது. மற்றவை அழிந்து விட்டன. இவள் தலையை இடப்பக்கம் சாய்த்துள்ளாள். இவளது இடக்கை வலப்பக்கம் கொடிபோல் நீண்டு வளைந்துள்ளது. வலது கை நெஞ்சுக்கு நேராக வளைந்து கட்டை விரலை உள்ளங்கைப் பக்கம் மடக்கி சைகை காட்டுகிறது. இக்கைகள் முறையே லதா (கொடி) அஸ்த முத்திரையையும் பதாகை முத்திரையையும் காட்டுகிறது என்பர். இவள் அணிந்துள்ள நெற்றிச் சுட்டியில் மணி பதிக்கப்படவில்லை. கழுத்தணிகளுள் ஒன்று கழுத்தை ஒட்டி வட்டமாகச் சுற்றியுள்ளது. இதில் முத்துக்கள் கோர்க்கப்பட்டுள்ளன. மணிகள் அமைந்த இரண்டாவது அணி இரட்டைவடமாக நெஞ்சு வரை தொங்குகிறது. சரமாலையாக உள்ள மூன்றாவது அணி, நாட்டிய வேகத்தினால் வலப்பக்க மார்பகத்தைச் சுற்றுகிறது.

**இடப்புறத் தூணின் நாட்டிய மங்கை :**

எல்லையில்லா மகிழ்வால் தில்லையில் நடம்புரியும் ஆடவல்லான் போல இப்பெண் பாவனை செய்கிறாள். இவளுடைய வயிற்றின் மேற்பகுதியில் இருந்து முடிவரை உள்ள தோற்றப்பகுதி மட்டும் அழியாமல் எஞ்சி நிற்கிறது. இவள் தலையை வலப்பக்கம் சாய்த்துள்ளாள். இவளது இடது கை இடப்பக்கம் நீண்டு வளைந்துள்ளது வலது கை நெஞ்சுக்கு நேராக வளைந்து, கட்டை விரலை உள்ளங்கைப் பக்கம் வளைத்து சைகை காட்டுகிறாள். இவள் காட்டும் முத்திரைகளும் முதல் கலையரசியை ஒத்துள்ளது எனலாம். இவளுடைய நெற்றிச் சுட்டியில் முத்துக்களால் அணி செய்யப்பட்ட மணி தொங்குகிறது. மூன்று கழுத்தணிகளில் கழுத்தைச் சுற்றியுள்ள அணியில், முத்துக்கள் கோர்க்கப்பட்டுள்ளன. மணிகள் பதித்த இரண்டாவது அணி நெஞ்சுவரை தொங்குகிறது. பெரியதாகவும் சரமாலையாகவும் உள்ள மூன்றாவது அணி, ஆட்ட வேகத்தினால் வலப் பக்க மார்பகத்தைச் சுற்றிப் பறக்கிறது.

இவ்விருவரின் உடல்களும் மஞ்சளாகவும், ஓரம் கருஞ்சிவப்பாகவும் பின்னணி சிவப்பாகவும் தீட்டப் பட்டுள்ளன.

இம்மகளிரின் ஓவியங்கள் பற்றி முன்னாள் தொல்பொருள் துறை இயக்குநர் இரா.நாகசாமி, “ஆடுகின்றாள் பாவை” என்னும் தலைப்பின் கீழ் அவருக்கே உரிய அழகியலில் வர்ணிக்கிறார்.

இளங்கோ அடிகள், ஒரு நாட்டியமகள் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை, ஆடலும் பாடலும் அழகும் குறைபடாது இலக்கணத்திற்கேற்ப ஒரு நாட்டிய மகளைக் காணுதல் வேண்டின் இப் பெண்ணைப் பாருங்கள் போதும்! என்கிறார்."

**முடிவுரை :**

ஆய்வின் முடிவான இப்பகுதியில், ஆய்வில் மேற்கூறிய அஜந்தா மற்றும் சிகிரியா ஓவியத்துடன் ஒத்துப்போனாலும், சித்தன்னவாசல் குடைவரை ஓவியங்கள் அழகியலில் தனிச் சிறப்பு மிக்கவை. இவை சமணர்களின் சமய பண்பாட்டையும் கலைத் திறனையும் அழகியல் சார்ந்த கருத்து

மேன்மையும் காட்டுகிறது. அழகியல் உலகை புதிய கோணங்களில் காணவும் புரிந்து கொள்ளவும் முயல்கிறது என்பது இவ்வாய்வு மூலம் அறியலாகும்.

**துணை நின்ற நூல்கள்**:-


1. சித்தன்னவாசல் ஆராய்ச்சி நூல்,
   புலவர் புசி. தமிழரசன்.
2. தமிழக ஓவியங்கள் ஒரு வரலாறு,
   ஐ.ஜோசப் தாமஸ்.
3. தமிழ்நாட்டின் தல வரலாறுகளும் பண்பாட்டுச் சின்னங்களும், (இணையதளம்),
   V. கந்தசாமி, எம்.ஏ, எம். எட்
4. சமணமும் தமிழும், (இணையதளம்),
   மயிலை. சீனி. வேங்கட சாமி
5. அழகியல்,
   கலாநிதி சபா. ஜெயராசா
6. புதுக்கோட்டை வரலாறு,
   டாக்டர், ஜெ. ராஜா முகமது,
   எம்.ஏ.(வர), எம்.ஏ(தொல்). எம்.ஏ(மானிட), பி.ஜி.எல், பி.எச்.டி.
7. தமிழர் சிற்பக்கலையில் அழகியல்
   கோட்பாடுகள்,
   முனைவர், சு- திருநாவுக்கரசு.
   எம்.எஃப்.ஏ, எம்.பில், பி.எச்.டி (சிற்பி, ஓவியர்).